ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 243/22 — 1976 දෙසැම්බර් 17 වැනි සිකුරාදා —1976.12.17
243/22 ம் இலக்கம்—1976 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. அ. எண். டபிளியு. 68(70)/76

### (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டம்

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், முதலமைச்சரின் விதப்புரையின் மீது, சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

வி. கோபல்லவ,
சனாதிபதி.

கொழும்பு,
1976, டிசெம்பர் 17.

#### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் அவசரகால (வியாபாரத்தை ஒழுங்குபடுத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

#### பாகம் I

2. (1) ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தியோராம் ஆண்டின் 62 ஆம் இலக்க, வியாபாரிகளுக்கு உரிமமளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், ஆளெவரும், ஏதேனும் பொருளின் வியாபாரியொருவராகத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு அவருக்கு அதிகாரமளிப்பதும் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்டதும் ஆன உரிமமொன்றினை உடையவராயிருந்தாலொழிய, அல்லது அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய, அல்லது கசெற்றிலும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய செய்தித்தாள்களிலும் வெளியிடப்படக்கூடிய அவ்வுவமத்தின் அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கவல்லாது வேறு எவ்வகையிலும், வியாபாரியாக அத்தகைய தொழிலைக் கொண்டுநடாத்துதலாகாது.

(2) ஓராம் பந்தியின் கீழான உரிமமொன்று தகுதிவாய்ந்த அதிகாரியின் தனியானதும் முழுமையானதுமான தற்றுணிபின்படி வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தற்றுணிபைப் பிரயோகித்தலானது ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையில் கேள்விக்குட்படுத்தப் படுதலாகாது.

3. (1) கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கட்டணத்தினை அத்தகைய ஆள் தகுதிவாய்ந்த அதிகாரிக்குச் செலுத்தினாலன்றி, தகுதிவாய்ந்த அதிகாரி ஆள் எவருக்கும் உரிமமெதையும் வழங்குதலாகாது.

(2) வெவ்வேறு வகுப்புகளைச் சார்ந்த வியாபாரிகள் தொடர்பிலும், வெவ்வேறு வகுதியினவான பொருட்கள் தொடர்பிலும் 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வெவ்வேறு நியதிகளும் நிபந்தனைகளும் குறித்துரைக்கப்படலாம்.

(3) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும், 12 ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தகுதிவாய்ந்த அதிகாரியினால் இல்லாதாக்கப்படும் வரையில் அல்லது இடைநிறுத்தி வைக்கப்படும் வரையில் அல்லது 13 அ என்னும் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க இல்லாதாக்கப்படும் வரையில் செல்லுபடியானதாதல் வேண்டும்.

(4) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமமெதுவும் வேறு ஆள் எவருக்கும் கைமாற்றப்படற்குரியதாதல் ஆகாது ; அத்துடன் அத்தகைய கைமாற்றமெதுவும் வெற்றும் வறிதுமானதாதல் வேண்டும்.

(5) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமங்கள் யாவும் பற்றிய பதிவேடுகளைத் தகுதிவாய்ந்த அதிகாரி பேணிவருதல் வேண்டும்.

4. (1) ஏதேனும் பொருளினை உற்பத்தி செய்வதில், இறக்குமதி செய்வதில், விற்பனை செய்வதில், அத்துடன் பயன்படுத்துவதில் அக்கறையுடையவர்களென தகுதிவாய்ந்த அதிகாரி அபிப்பிராயப்படும் அத்தகைய ஆட்களுடன் கலந்தாலோசித்து, அத்தகைய பொருளைப் பங்கீடு செய்வதற்கான ஒரு திட்டம் பற்றி முடிவுசெய்யலாம். தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய ஏதேனும் பங்கீட்டுத் திட்டத்தில், பொருள்களுக்குப் பெயர்த்துண்டு ஒட்டுமாறும், விலை குறிக்குமாறும், அவற்றைப் பொதிகளாக்குமாறும் தேவைப்படுத்தும் ஏற்பாட்டினைச் செய்யலாம்.

(2) அத்தகைய பங்கீட்டுத் திட்டமொவ்வொன்றும் கசெற்றிலும், ஆகக்குறைந்தது ஒரு சிங்களச் செய்தித்தாளிலும் ஒரு தமிழ்ச் செய்தித்தாளிலும் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளிலும் வெளிப்படுத்தல் வேண்டும்.

5. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, தாமாகவே அல்லது எழுத்துமூலமான முறைப்பாடொன்றையும் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஏதேனும் பொருளுக்குரிய பங்கீட்டுத் திட்டத்தின் தொழிற்பாடுபற்றி விசாரணை செய்யலாம்.

(2) அத்தகைய ஏதேனும் விசாரணையின் பின்னர், தகுதிவாய்ந்த அதிகாரி அத்தகைய ஏதேனும் பங்கீட்டுத் திட்டத்தினை வேறுபடுத்தலாம் அல்லது சீராக்கலாம். அத்தகைய் வேறுபடுத்தல் அல்லது சீராக்கல், 4 (2) ஆம் ஒழுங்குவிதியில் ஏற்பாடு செய்யப்பட்ட விதத்தில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் பொருளுக்கான பங்கீட்டுத் திட்டத்தின் ஏற்பாடுகளுள் எதனையும் வியாபாரி எவரும் மீறுதல் ஆகாது.

6. (1) தகுதிவாய்ந்த அதிகாரி கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் (மொத்த விலை, சில்லறை விலை ஆகிய இரண்டினதும்) ஆகக்கூடிய விலையை நிர்ணயிக்கலாம், அவ்விலைக்கு மேல் பொருள் எதுவும் விற்கப்படுதலுமாகாது :

ஆயினும், இவ்வொழுங்குவிதியின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஏதேனும் பொருள் தொடர்பில் நிர்ணயிக்கப்படும் விலையானது, 1975 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் கட்டளைமூலம் அப்பொருள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு இயையவிருத்தல் வேண்டும்.

ஆயின், மேலும், எப்பொருளின் ஆகக்கூடிய விலை தொடர்பில் 1975 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் கட்டளை எதுவும் ஆக்கப்படவில்லையோ அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படவில்லையோ, அப்பொருள் எதனதும் ஆகக்கூடிய விலையை (1) ஆம் பந்தியின் கீழான கட்டளையின்மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியானவர் நிர்ணயிக்குமிடத்து, அத்தகைய கட்டளையை அவர் தேசிய விலைகள் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன், தேசிய விலைகள் ஆணைக்குழுவானது, அத்தகைய ஆற்றுப்படுத்துகையை, அது சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ்ச் செய்யப்பட்ட ஒரு வேண்டுகோள் எனுமாற்போன்று, கையாளுதலும் வேண்டும். அத்தகைய ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்டிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஆக்கப்பட்ட மேற்சொல்லப்பட்ட கட்டளையானது, செல்லுபடியும் பயனுமுடையதாதல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரியினால் ஆக்கப்பட்ட கட்டளையை அத்தகைய ஆணைக்குழு வேறுபடுத்துமிடத்து, அவர், அத்தகைய வேறுபடுத்தலுக்கு இயைய, அத்தகைய பொருள் தொடர்பில் இவ்வொழுங்குவிதியின்கீழ் புதிய கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும்.

(2) கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் தகுதிவாய்ந்த அதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பொருள் எதனையும் விற்பனை செய்யும் வியாபாரி ஒவ்வொருவரும், விற்பனைக்குள்ள அத்தகைய பொருள் ஒவ்வொன்றினதும் ஆகக்கூடிய விற்பனை விலையைக் காட்டும் அறிவித்தலொன்றைத் தமது தொழிலிடத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, ஏதேனும் பொருளுக்கு பெயர்த்துண்டு ஒட்டுதல் தொடர்பிலும், விலை குறித்தல் தொடர்பிலும், அவற்றைப் பொதியாக்குதல் தொடர்பிலும், பொதுவான பணிப்புகளை வியாபாரிகளுக்கு வழங்கலாம்; அத்துடன் ஏதேனும் வகுப்பைச் சார்ந்த வியாபாரிகளுக்கு வழங்கப்படும் பொதுவான பணிப்புக்களின்மூலம், அல்லது குறிப்பிட்ட வியாபாரி எவர்க்கும் வழங்கப்படும் சிறப்பான பணிப்புக்களின் மூலம், விடயத்திற்கேற்ப, அவ்வகுப்புத் தொடர்பில் அல்லது அவ்வியாபாரி தொடர்பில்—

(அ) ஏதேனும் ஒரு நாளில் விற்கப்படவேண்டிய ஏதேனும் பொருளின் ஆகக்கூடிய அளவையும் ;

(ஆ) அத்தகைய பொருள் எந்த நேரங்களிலும், எந்த இடங்களிலும் விற்கப்படலாம் என்பதையும் ; அத்துடன்

(இ) அப்பொருளின் விற்பனை பற்றிய வேறு ஏதேனும் நிபந்தனைகளையும் ;

விதிக்கலாம் என்பதுடன், அத்தகைய பணிப்புக்கள் ஏற்புடையனவாகும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய பணிப்புக்களுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

(4) மூன்றும் பந்தியின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியால் வழங்கப்படும் பொதுவான பணிப்பு ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(5) மூன்றும் பந்தியின்கீழ் தகுதிவாய்ந்த அதிகாரியால் எவரேனும் வியாபாரிக்கு வழங்கப்படும் சிறப்பான பணிப்பு ஒவ்வொன்றும், எழுத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன், அது எந்த வியாபாரிக்கு வழங்கப்பட்டதோ அந்த வியாபாரிக்குச் சேர்ப்பிக்கப்படலும் வேண்டும்; அத்துடன், அத்தகைய பணிப்பு எதுவும் அத்தகைய வியாபாரிக்கு முகவரியிடப்பட்டு அவரது தொழிலிடத்துக்கு அஞ்சல்மூலம் அனுப்பப்பட்டால், அது அவருக்குச் சேர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும். அங்ஙனம் அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்பட்டமையை எண்பிப்பதில், பணிப்பை உள்ளடக்கிய ஆவணம் முறைப்படி முகவரியிடப்பட்டு அஞ்சலிலிடப்பட்டது என்று எண்பித்தல் போதுமானதாகும்.

7. (1) தகுதிவாய்ந்த அதிகாரியால் கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் விதிக்கப்படும் நியமனங்களுக்கும் அளவுக்குறிப்பீடுகளுக்கும் இயையவராத ஏதேனும் பொருளின் விற்பனை தொடர்பான முறைப்பாடுகளைப்பற்றி தகுதிவாய்ந்த அதிகாரி விசாரிக்கலாம். ஏதேனும் பொருள் தொடர்பில் எவையேனும் நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும் இலங்கை நியமப் பணியகத்தினால் விதிக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளும், இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியால் விதிக்கப்பட்ட நியமங்களும் அளவுக்குறிப்பீடுகளுமாகக் கருதப்படல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் கீழான முறைப்பாடு எதுவும், அத்தகைய விற்பனை நடந்தபின்னர் ஏழு நாட்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரிக்குக் கிடைக்கக்கூடியதாக அவருக்கு எழுத்துமூலம் செய்யப்படல் வேண்டும்.

(3) அத்தகைய முறைப்பாடுபற்றி நடாத்தப்படும் விசாரணை எதிலும், அத்தகைய முறைப்பாடு எந்த வியாபாரிக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ளதோ அந்த வியாபாரி தாமாகவே நேரில் அல்லது அதற்கென ஒரு முகவர்மூலம் தமது வாதத்தைக்கூறுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தினைத் தகுதிவாய்ந்த அதிகாரி அளித்தல் வேண்டும்.

(4) விசாரணையின் பின் தகுதிவாய்ந்த அதிகாரியானவர், இவ்வொழுங்குவிதியின்கீழ் விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்டதாகக் கருதப்படும் நியமங்களுக்கு அல்லது அளவுக்குறிப்பீடுகளுக்கு இயையவிராத ஒரு பொருள் விற்கப்பட்டிருக்கிறதெனக் கருதுமிடத்து, அவர் இன்னலுற்ற திறத்தவருக்கு நட்டஈடு செலுத்தும்படி, அல்லது அத்தகைய பொருளை மாற்றிக் கொடுக்கும்படி அல்லது அத்தகைய பொருளுக்கெனக் கொடுக்கப்பட்ட தொகையைத் திருப்பிக்கொடுக்கும்படி அவ்வியாபாரிக்குக் கட்டளையிடுதல் வேண்டும்.

(5) நான்காம் பந்தியின் கீழான கட்டளையொன்று எழுத்திலாக்கப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வியாபாரிக்குப் பதிவஞ்சல்மூலம் தெரியப்படுத்தப்படலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய வியாபாரி அத்தகைய கட்டளைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

8. (1) ஏதேனும் பொருளைத் தமது உடைமையில் வைத்திருப்பவரான எவ்வியாபாரியும் அத்தகைய பொருளை விற்பதற்கு மறுத்தலாகாது. ஏதேனும் பொருளைச் சிறு அளவில் சில்லறையாகக் கொள்வனவு செய்தல் ஆட்களுக்கு வழக்கமாகவுள்ளவிடத்து, அத்தகைய ஏதேனும் சிறு அளவினை எவரேனும் ஆளுக்கு விற்பதற்கு எவ்வியாபாரியும் மறுத்தலாகாது.

(2) ஓராம் பந்தியின் கீழான தவறொன்றுக்கான ஏதேனும் குற்றவழக்குத் தொடுப்பில்—

(அ) சம்பந்தப்பட்ட சந்தருப்பத்தில், அப்பொருளின் நியாயமான அளவை அவர் வழங்கினர் என்றும், அல்லது கோரப்பட்ட அளவினை வழங்குவதற்குப் போதுமான அளவு பொருளைத் தமது உடைமையில் தாம் வைத்திருக்கவில்லை என்றும் ; அல்லது

(ஆ) அப்பொருளின் மொத்தவியாபாரியொருவராக மட்டுமே அவர் அத்தொழிலைக் கொண்டுநடாத்தினர் என்றும், வாங்குபவரால் கோரப்பட்ட அளவினை விற்றல், வழக்கமான மொத்த வியாபார முறைக்கு மாறானதாயிருந்திருக்கும் என்றும் ; அல்லது

(இ) சம்பந்தப்பட்ட சந்தருப்பத்தில் அப்பொருளின் விற்பனையானது, எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணானதாய் அல்லது 6 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் பணிப்புக்கு முரணானதாய் இருந்திருக்கும் என்று

எண்பிப்பது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் போதுமான எதிர்வாதமாகவிருத்தல் வேண்டும்.

(3) இரண்டாம் பந்தியின் நோக்கத்துக்காக நியாயமான அளவு என்பது யாதெனத் தீர்மானித்தலில், அவரது பாவனைக்கும் அவரது வீட்டிலுள்ள உறுப்பினர்களின் பாவனைக்கும் நியாயமாகத் தேவைப்படும் அத்தகைய பொருளின் அளவினைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

9. தகுதிவாய்ந்த அதிகாரி, அவரது பணிகளுள் எவற்றையும் நிறைவேற்றுதற்காக அத்தகைய தகவல் அவசியமென அவரால் கருதப்படின், எவையேனும் விபரத்திரட்டுக்களையும், ஊர்தொகைகளையும், கணக்கீட்டு ஆவணங்களையும், பொருட்பதிவேடுகளையும், வேறு தகவல்களையும் எவரேனும் வியாபாரியிடமிருந்து கேட்பதற்குத் தத்துவம் உடையராதல் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இணங்கியொழுகப்படுகின்றனவா என்பதை நிச்சயித்துக்கொள்ளும் நோக்கத்துக்காக, தகுதி வாய்ந்த அதிகாரியானவர்—

(அ) எவரேனும் வியாபாரி தமது தொழிலைக் கொண்டு நடாத்தும் வளவுகளில், பகலில் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசிப்பதற்கும் சோதனையிடுவதற்கும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய தொழில் தொடர்பில் இவ்வொழுங்குவிதிகளால் அல்லது இவற்றின்கீழ் வைத்திருக்கும்படி தேவைப்படுத்தப்படும் எவையேனும் பதிவேடுகளைச் சோதனைசெய்வதற்கும் அவற்றின் பிரதிகளை எடுப்பதற்கும்,

தத்துவமுடையவராதல் வேண்டும்.

11. தகுதிவாய்ந்த அதிகாரியானவர், இவ்வொழுங்குவிதிகளினால் தமக்கு அளிக்கப்படும் அல்லது தம்மீது சுமத்தப்படும் ஏதேனும் தத்துவத்தை, பணியை அல்லது கடமையை எவரேனும் ஆளுக்கு எழுத்தில் கையளிக்கலாம்.

12. (1) இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எவற்றையும் மீறுகின்றவரான ஒவ்வோர் ஆளும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு, அல்லது ஒரு மாதத்துக்கு மேற்படாததொரு காலத்துக்கு இருவகையுளொருவகையான மறியற்றண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் பின்னர் தவறு தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாள் தொடர்பிலும் ஐம்பது ரூபாவைக் கொண்ட குற்றப் பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஆறும் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றை மீறுகின்றவரான ஒவ்வோர் ஆளும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னிலையில் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், நான்கு வாரங்களுக்குக் குறையாததும் ஆறு மாதங்களுக்கு மேற்படாததுமான காலமொன்றுக்கான மறியற்றண்டனைக்கும், அத்துடன் சேர்த்து ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதலும் வேண்டும்.

13. (1) எவரேனும் வியாபாரி—

(அ) ஏதேனும் பொருளை, அத்தகைய பொருளுக்காக 6 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட, அல்லது 1975 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, தேசிய விலைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டதாகக் கருதப்படும் கட்டளையினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேலானதொரு விலைக்கு விற்றமைக்காக ; அல்லது

(ஆ) ஏழாம் ஒழுங்குவிதியின் (4) ஆம் பந்தியின் கீழாக்கப்பட்ட கட்டளையொன்றுக்கு இணங்கியொழுகத் தவறியமைக்காக, அல்லது

(இ) எட்டாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளை மீறியமைக்காக,

நீதிமன்றமொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, கட்டளைமூலம், அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்படும் ஏதேனும் காலத்துக்கு, அத்தகைய வியாபாரியின் உரிமத்தை இடைநிறுத்தி வைக்கலாம் அல்லது அவ்வுரிமத்தை இல்லாதொழிக்கலாம்.

(2) ஒராம் பந்தியின்கீழ் அவருக்கெதிராகக் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ள வியாபாரி எவரும், அத்தகைய கட்டளையை ஆக்கியவரான தகுதிவாய்ந்த அதிகாரியினால் அல்லது அவரது சார்பில் அத்தகைய கட்டளை அவ்வியாபாரிக்குத் தெரிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் ஒரு மாதம் முடிவடைவதற்கு முன்னர், வியாபாரத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் ; அமைச்சரானவர், தமக்குச் செய்யப்படும் மேன்முறையீடு எதனையும் கையாளுகையில், எக்கட்டளைக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதோ அக்கட்டளையை உறுதிப்படுத்தலாம் வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம் ; அத்துடன் அத்தகைய வியாபாரியின் உரிமம் இல்லாதொழிக்கப்பட்டிருக்குமிடத்து, புதிய உரிம மொன்றை அவருக்கு வழங்கும்படி அல்லது உரிமம் இடைநிறுத்தப்பட்டிருக்குமிடத்து, அவரது உரிமத்தின் இடைநிறுத்தத்தை முடிவுறுத்தும்படி அத்தகைய தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அமைச்சர் கட்டளையிடலாம்.

(3) மேன்முறையீடொன்றின்மீது அமைச்சரின் முடிபு, முற்றானதும் இறுதியானதுமாதல் வேண்டும்.

13அ. (1) பன்னிரெண்டாம் 13 ஆம் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரியானவர், அவசியமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய விசாரணையின் பின்னர், 5 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அவருக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ள எவரேனும் ஆள் இப்பாகத்தின் ஏற்பாடுகளுள் எதனையும், அல்லது II ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுள் எதனையும், அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமத்தின் நிபந்தனைகளை மீறியுள்ளாரெனத் திருப்திப்பட்டால்—

(அ) அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்கி, அத்தகைய இல்லாதாக்கல் பற்றிய நிகழ்வை அத்தகைய ஆளுக்கு உடனடியாக அறிவிக்கலாம் ; அத்துடன்

(ஆ) அத்தகைய மீறுகை புரியப்பட்ட நேரம் அவரது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படும் ஏதேனும் பொருளைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்யலாம்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1)(ஆ) என்னும் பந்தியின்கீழ், அல்லது 15 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உப்பந்தியின் கீழ் ஏதேனும் பொருள் கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியானவர், நட்டஈடு தொடர்பில் அமைச்சரால் ஆக்கப்படும் (8) ஆம் பந்தியின்கீழான ஏதேனும் பணிப்புக்கமைய அல்லது அத்தகைய பொருள் தொடர்பில் (6) ஆம் பந்தியின்கீழ்த் தொடுக்கப்பட்ட ஏதேனும் வழக்கிலான தீர்ப்புக்கமைய அத்தகைய ஆளுக்கு நட்டஈடு செலுத்துவதற்காளாதல் ஆகாது.

(3) (1)(அ) என்னும் பந்தியின்கீழ் உரிமமொன்று இல்லாததாக்கப்படுவதனால் எவரேனும் ஆள் இன்னலுறுமிடத்து, அவர், அத்தகைய இல்லாதாக்கல் பற்றி அறிவிக்கப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய இல்லாதாக்கலுக்கெதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம்.

(4) மூன்றும் பந்தியின்கீழான மேன்முறையீடொன்றின்மீது அமைச்சரினால் ஆக்கப்படும் ஏதேனும் கட்டளையானது முற்றானதும் முடிவானது மாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம் எதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலாகாது.

(5) மூன்றும் பந்தியின்கீழ் தமக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றை அமைச்சர் அனுமதிக்குமிடத்து, அவர் உரிமத்தை மீளவழங்கும்படி பணிக்கலாம்.

(6) இவ்வொழுங்குவிதியின் (1)(ஆ) என்னும் பந்தியின் கீழ் அல்லது 15 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உப் பந்தியின்கீழ் ஏதேனும் பொருளைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதனால் ஆள் எவரும் இன்னலுறுமிடத்து, அவர்—

(அ) அவ்வாறு கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அத்தகைய கைப்பற்றுதலுக்கும் பறிமுதலுக்கும் எதிராக அமைச்சருக்கு மேன்முறையீடு செய்யலாம் ; அல்லது

(ஆ) அவ்வாறு கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், அத்தகைய கைப்பற்றலும் பறிமுதலும் தொடர்பாகத் தோதான நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடுப்பதற்குத் தாம் கருதுவதாகத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுக்கலாம்.

(7) ஆறும் பந்தியின் (அ) என்னும் உப்பந்தியின்கீழ் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றின்மீது அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை எதுவும் முற்றும் முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றமெதனிலும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(8) ஆறும் பந்தியின் (அ) என்னும் உட்பந்தியின்கீழ் தமக்குச் செய்யப்பட்ட மேன்முறையீடொன்றை அமைச்சர் அனுமதிக்குமிடத்து அவர் பொருட்களைத் திருப்பிக் கொடுக்கும்படி பணிக்கலாம். இப்பந்தியின்கீழ் எவரேனும் ஆளுக்குச் செலுத்தப்படவேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ள நட்டஈடானது, இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய பொருள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலையை விஞ்சுதலாகாது, அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியினால் அத்தகைய பொருளின் விற்பனைமூலம் பெறப்பட்ட தொகையானது அத்தகைய ஆகக்கூடிய சில்லறை விலையினும் குறைவாகவிருப்பின், அத்தகைய விற்பனைமூலம் பெறப்படும் வருவாயை விஞ்சுதலாகாது.

(9) எவ்வழக்குத் தொடர்பாக (6) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த வழக்கானது, அத்தகைய அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள், தோதான நீதிமன்றத்தில் தொடுக்கப்படாதிருப்பின், அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கும் ஆள், அவ்வாறு கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களுக்கு எத்தகையதுமான மேலதிக உரிமைக்கோரிக்கையெதனையும் உடையவராதலாகாது.

(10) ஆறும் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின்கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்ட வழக்கொன்றில், இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அத்தகைய பொருள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய சில்லறை விலையினும் பார்க்கக் கூடுதலான தொகையையோ, அல்லது தகுதி வாய்ந்த அதிகாரியினால் அத்தகைய பொருளின் விற்பனைமூலம் பெறப்பட்ட தொகையானது, அத்தகைய ஆகக்கூடிய சில்லறை விலையினும் குறைவாகவிருப்பின், அத்தகைய விற்பனைமூலம் பெறப்பட்ட வருவாயைவிடக் கூடுதலான தொகையையோ நட்டஈடாகப் பெறுவதற்கு வழக்காளி உரித்துடையவராதலாகாது.

(11) ஆறும் பந்தியின் (அ) என்னும் உட்பிரிவின்கீழ் அமைச்சருக்கு மேன்முறையீடொன்று செய்யப்பட்டிருப்பினும், அல்லது (6) ஆம் பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியின்கீழ் வழக்குப் பற்றிய அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பினும், தகுதிவாய்ந்த அதிகாரியானவர், தம்மால் அவ்வாறு கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்ட அத்தகைய பொருட்களைக் கையாளலாம்.

## பாகம் II

14. (1) எவரேனும் ஆள் அதிகாரமளிக்கப்படாத ஏதேனும் பொருளை ஏதேனும் தெருவில் அல்லது தெருவின் மீது விற்றலோ, வாங்கும்படி முன்வைத்தலோ, விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தலோ அல்லது காண்பித்தலோ ஆகாது.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியானவர், (1) ஆம் பந்திக்கு முரணாக எந்தக் கட்டமைப்பில் அத்தகைய ஏதேனும் பொருள் வைத்து விற்கப்படுகின்றதோ, வாங்கும்படி முன்வைக்கப்படுகின்றதோ அல்லது விற்பனைக்கு வெளிக்காட்டி வைக்கப்படுகின்றதோ அல்லது காண்பிக்கப்படுகின்றதோ, அந்தக் கட்டமைப்பை அழிப்பிக்கலாம் அல்லது அகற்றுவிக்கலாம் என்பதுடன், அத்தகைய பொருளைப் பறிமுதலும் செய்யலாம்.

15. (1) சட்டமுறையான அதிகாரமின்றி அல்லது நியாயமான காரணமின்றி (அதனை எண்பிக்கும் பொறுப்பு அவரைச் சார்ந்ததால் வேண்டும்), எவரேனும் ஆள் அதிகாரமளிக்கப்படாத ஏதேனும் பொருளை அவரது உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாகாது.

(2) தகுதிவாய்ந்த அதிகாரியானவர்—

(அ) எந்தக் கட்டடத்தில் அல்லது இடத்தில் எவையேனும் அதிகாரமளிக்கப்படாத பொருட்கள் இருக்கின்றனவெனச் சந்தேகிக்கின்றாரோ அந்தக் கட்டடத்துள் அல்லது இடத்துள் இரவில் அல்லது பகலில் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசித்துத் தேடுகையிடலாம் ;

(ஆ) இவ்வொழுங்குவிதியின் கீழ் தனது தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கத்திற்காக உடைத்துத் திறக்கப்படல் நியாயமான அவசியமானதென அவர் கருதுகின்ற ஏதேனும் கதவை, நிலவறையை, பேழையை, இரும்புப் பெட்டியை, பொதியை அல்லது களஞ்சியப்படுத்தும் இடத்தை உடைத்துத் திறக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய எவையேனும் பொருட்களை அவர் கண்டுபிடிக்குமிடத்து அவற்றைக் கைப்பற்றி பறிமுதல் செய்யலாம்.

15அ. இவ்வொழுங்குவிதிகளின்கீழ் எவரேனும் ஆளினால் புரியப்பட்டுள்ளதெனச் சார்த்தப்பட்ட தவறொன்று தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அந்நீதிமன்றத்தின் வேறெல்லா அலுவல்களிலும் பார்க்க முன்னுரிமை பெறுதல் வேண்டும்.

15ஆ. எவரேனும் ஆள் இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுமிடத்து, அல்லது இவ்வொழுங்கு விதிகளின்கீழ் பொருள் எதுவும் கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரியானவர் தாம் நியாயமானதெனக் கருதக்கூடிய அத்தகைய கைம்மாறுகளை—

(அ) அத்தகைய குற்றத்தீர்ப்புக்கு இட்டுச்சென்ற அல்லது அத்தகைய பொருளைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்தலுக்கு இட்டுச்சென்ற தகவலைத் தெரிவித்த எவரேனும் ஆளுக்கும், அத்துடன்

(ஆ) அத்தகைய குற்றத்தீர்ப்புத் தொடர்பிலான கண்டுபிடிப்பில் சம்பந்தப்பட்ட ஆளுக்கும், அல்லது அத்தகைய பொருளைக் கைப்பற்றிப் பறிமுதல் செய்வதில் சம்பந்தப்பட்ட எவரேனும் ஆளுக்கும்,

கொடுக்கலாம்.

15இ. இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்று இவ்வொழுங்குவிதிகளின்கீழ் இல்லாததாக்கப்பட்டுள்ளவிடத்து, அல்லது எவரேனும் ஆளின் உடைமையிலிருக்கும் பொருள் எதுவும் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப, அத்தகைய உரிமத்தை வைத்திருப்பவரின் பெயரையும் முகவரியையும், அல்லது எவ்வாளின் உடைமையிலிருந்து அத்தகைய பொருள் கைப்பற்றப்பட்டுப் பறிமுதல் செய்யப்பட்டதோ அத்தகைய ஆளின் பெயரையும் முகவரியையும், தகுதிவாய்ந்த அதிகாரி தாம் தோதானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய முறையில் வெளியிடுதல் வேண்டும், அல்லது வெளியிடுவித்தல் வேண்டும்.

16. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"பொருள்" என்பது மனித வாழ்க்கைக்கு அவசியமானதும், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையால் தகுதிவாய்ந்த அதிகாரியால் குறித்துரைக்கப்படக்கூடியதுமான உணவிற்காய, குடிப்பதற்காய அல்லது வணிகத்திற்காய அத்தகைய ஏதேனும் பொருள் என்று பொருளாகும் ;

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது—

(அ) இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக தகுதிவாய்ந்த அதிகாரியாகப் பெயர் குறித்தோ அன்றிப் பதவி குறித்தோ முதலமைச்சரினால் நியமிக்கப்படும் எவரேனும் ஆள் எனவும் ;

(ஆ) முழுத் தீவிற்குமான விலைக் கட்டுப்பாட்டாளர் (உணவும் நானாவிதப் பொருட்களும்) ; பிரதி விலைக் கட்டுப்பாட்டாளர் (உணவும் நானாவிதப் பொருட்களும்) ; அத்துடன் எல்லா உதவி விலைக் கட்டுப்பாட்டாளரும் (உணவும் நானாவிதப் பொருட்களும்) எனவும் ; அத்துடன்

(இ) ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்கும் அத்தகைய மாவட்டத்தின் அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், அத்துடன் எல்லா உதவி அரசாங்க அதிபரும் எனவும்,

பொருளாகும் ;

"தெரு" என்பது பொதுமக்களுக்கு நடமாடுவதற்கான உரிமை இருப்பதுவும், ஏதேனும் நடைபாதைத் தளத்தினால் மூடப்பட்டதான அல்லது மூடப்படாததான நிலத்தைக் கொண்டுள்ளதுமான ஏதேனும் வீதியை, ஒழுங்கையை அல்லது பாதையை பொது வழியாகவிருப்பினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, உள்ளடக்கும் என்பதுடன், அவற்றுடன் சேர்ந்துள்ள அல்லது இணைந்துள்ள எல்லா வடிகால்களையும், வரம்புகளையும், குழிகளையும், அல்லது பகிரங்கமான திறந்த இடங்களையும், அத்துடன் ஏதேனும் தெருவின் அல்லது வீதியின் பாதுகாப்பிற்கென அல்லது நன்மைக்கென ஒதுக்கப்பட்டிருக்கக் கூடியதும் அத்தெருவின் அல்லது வீதியின் அருகாமையிலுள்ளதுமான அத்தகைய தரிசுநிலத்தையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"அதிகாரமளிக்கப்படாத பொருள்" என்பது—

(i) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது கொண்டுவரப்பட்ட ஏதேனும் பொருள் ; அல்லது

(ii) எப்பொருளின் விநியோகம் உணவுக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றதோ அத்தகைய ஏதேனும் பொருள் ; அல்லது

(iii) அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் பகிரங்கக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஏதேனும் பொருள், அல்லது

(iv) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் அத்தகைய விற்பனைக்கென வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவரல்லாத வியாபாரியொருவரின் உடைமையிலுள்ள ஏதேனும் பொருள் ; அல்லது

(v) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தில் குறித்துரைக்கப்படாத இடமொன்றில் காணப்படும் ஏதேனும் பொருள் ; அல்லது

(vi) (அ) தகுதிவாய்ந்த அதிகாரியின் கருத்துப்படி, வியாபாரியொருவரின் சாதாரண வியாபார முயற்சிகளின் தேவைகளுக்கு மேலதிகமாக அத்தகைய வியாபாரியின் உடைமையில் காணப்படும் அத்தகைய அளவிலான ஏதேனும் பொருள் ; அல்லது

(ஆ) தகுதிவாய்ந்த அதிகாரியின் கருத்துப்படி, வேறு எவரேனும் ஆளின் சாதாரண சுயதேவைகளுக்கு மேலதிகமாக அத்தகைய ஆளின் உடைமையில் காணப்படும் அத்தகைய அளவிலான ஏதேனும் பொருள்,

எனப் பொருளாகும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது